<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் உப்பார் ஓடையின் குறுக்கே ரூ.15.00 இலட்சம் செலவில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டம் – நிலை நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ப்பி2) துறை

அரசாணை (நிலை) எண். 140 நாள் 21.5.2008

வைகாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2039

<u>படிக்கப்பட்டது</u>:

1. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண்.OT4/AE4/Part II/2008–09/2007, நாள் 11.1.2008
2. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண். எப்2/பகுதி II திட்டங்கள் 2008–2009, நாள் 21.4.2008

------

<u>ஆணை</u>:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் உப்பார் ஓடையின் குறுக்கே ரூ.15.00 இலட்சம் செலவில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்துடன் பெறப்பட்ட மேற்கண்ட திட்டம் குறித்த விளக்கக் குறிப்பில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தெற்கு மலை வனப்பகுதியில் உப்பார் ஓடை உற்பத்தியாகி 20 கிலோ மீட்டர் ஓடி திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் இருக்கன்துறை கிராமம் அருகே அரபிக்கடலில் கலக்கிறது என்றும், நிலநீர்க் கோட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட தல ஆய்வின்படி இந்த தலம் அதிநுகர்வு ஒன்றியமாகவும், 12 மீட்டர் வரை நல்ல நீரூற்று தலமாகவும் உள்ளது என்றும், உத்தேசிக்கப்பட்டுள்ள தடுப்பணையின் கொள்ளளவு 0.10 மில்லியன் கன அடி ஆகும் என்றும், இந்த தடுப்பணை கட்டுவதன் மூலம் கடல் நீர் உட்புகுவதை தடுக்க இயலுவதுடன், இத்திட்டத்தினால் குறைந்த பட்சமாக 36.00 ஏக்கர் பாசன நிலம் 36 நீரூற்று கிணறுகள் மூலம் பயனடையும் என்றும், இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தத் தேவையில்லை என்றும், இதன் பயன்செலவு விகிதம் 1.18:1 ஆகும் என்றும், இத்திட்டத்தின் மதிப்பு 2008–2009 ஆம் ஆண்டு விலை விகிதப்படி மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் ஆகும் என்றும், மற்றும் இத்திட்டம் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால்,

இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது என்றும் நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் உப்பார் ஓடையின் குறுக்கே ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4.மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4702 – 00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு–101. மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA சிறு பாசன சிறப்புத் திட்டம் –16 பெரும் பணிகள் " (து.தொ.கு. 4702–00–101–JA –1607)''.

5. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.26458/பொ.ப.II/2008 நாள் 8.5.2008–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை 2.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி
மாநில கணக்காயர், சென்னை.18
<u>நகல்</u>
நிதி (பொ.ப. II / வ.செ.II) ) துறை, சென்னை.9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்)
இ.கோ /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்